## இயல் 6.5 - புள்ளியியல்


பயிற்சி எண் :: 6.5.2.1.H

புள்ளியியல் - பட்டை வரைபடம் - பயிற்சி

## புள்ளியியல் - பட்டை வரைபடம் - பயிற்சி

அமுதனின் தாயார் அவனிடம் சந்தைக்குச் சென்று சில காய்கறிகள் வாங்கி வருமாறு பணித்தார். அமுதன், வாரந்திர சந்தைக்குச் சென்று முதலில் வேண்டிய காய்கறிகளின் விலையை வினவித்தெரிந்து கொண்டான். அதன் விவரம் கீழ்வருமாறு.

அமுதனின் கிராமத்தில் உள்ள சந்தையில் காய்கறிகளின் விலை





**மேலே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தின் அடிப்படையில் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிக்கவும்**

1. மொத்தம் எத்தனை காய்கறிகளின் விலையை அமுதன் வினவித்தெரிந்து கொண்டான்? 6 காய்கறிகள்
2. அவற்றுள் மிக அதிக விலையுள்ள காய்கறி யாது? கேரட்
3. அதன் விலை யாது? ஒரு கிலோவிற்கு ₹22
4. அவற்றுள் மிகக்குறைந்த விலையுள்ள காய்கறி யாது? கத்திரிக்காய்
5. அதன் விலை யாது? ஒரு கிலோவிற்கு ₹12


## பட்டை வரைபடம் - பயிற்சி

கீழே கொடுக்கப்பட்டுள்ள இரு வரை படங்களும் மேலே காண்பிக்கப்பட்டுள்ள வரைபடத்தின் இரு பிரதிகளே . . . அவற்றில் காண்பிக்கப்பட்டுள்ள தரவுகள் எல்லாம் ஒன்றே. ஆனால் அவற்றிற்கிடையில் ஒரு வித்தியாசம் உள்ளது. முதல் வரைபடத்தில் செங்குத்துகோட்டின் துவக்கம் பூச்சியத்திலும், இரண்டாம் வரைபடத்தில் 10-லும் அமைந்துள்ளது. இது, தரவுகளுக்கிடையே உள்ள வித்தியாசத்தை மிகைப்படுத்தி சுட்டிக்காண்பிப்பதற்கு மிக ஏதுவாக அமைகிறது.

அமுதனின் கிராமத்தில் உள்ள சந்தையில் காய்கறிகளின் விலை




அமுதனின் கிராமத்தில் உள்ள சந்தையில் காய்கறிகளின் விலை




Sum & solution prepared on Tuesday 7th September, 2021 :: 05:45 Hrs.
All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.